1968 பிப்ரவரி 17]

***70 வினா.—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிறுவாணி தண்ணீர்த் திட்டத்தை சிங்கநல்லூர் நகருக்கும் குறிச்சி, குனியமுத்தூர் பகுதிக்கும் விரிவு படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உண்டு.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் உண்டு என்று தெரிவித்தார்கள். மேற்படி திட்டம் எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்? எப்பொழுது அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : சீஃப் எஞ்சினியர் களுடைய ப்ராஜக்ட் ரிப்போர்ட் வந்திருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு பேசி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு இப்பொழுது தொடர்பு கொள்ளப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட வினாக் கள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

திருப்பூர் கூட்டுறவு பால் விநியோகச் சங்கம்

***62 வினா.—திரு. சு. துரைசாமி**: மாண்புமிகு உணவு, வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூர் கூட்டுறவு பால் விநியோக சங்கத்தின் மூலம் கறவை மாடுகள் வாங்கக் கடன் கொடுப்பதில் விதி முறைகள் உண்டா?

(இ) ஆம் எனில், விதி முறைகள் யாவை?

(உ) இந்த விதி முறைகளை மீறி சிலருக்குக் கடன் கொடுக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) திருப்பூர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்தின் உறுப் பினர்களுக்குக் கடன்கள் வழங்குவது, சங்கத்தின் 38-ஏ, 38-பி துணை விதிகளின்படி முறைப்படுத்தப்படுகிறது.

(உ) இல்லை.

திரு. சு. துரைசாமி : கூட்டுறவு பால் விநியோக சங்கத்தில் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட சில்லிங் ப்ளான்ட் மூலமாக எவ்வளவு லிட்டர் பால் பதனப்படுத்தப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இது மூலக் கேள்வி யோடு சம்பந்தப்பட்ட கேள்வியல்ல.